(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(4).]

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2026 சனவரி 23, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2026 பெப்ரவரி 03, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கு அனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தப்படாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலம் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மற்றும் 2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்தம்) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17(10) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் தொலைத்தொடர்புகள் உட்கட்டமைப்பு வசதிகளை பகிர்ந்து கொள்ளும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அப்போதைய தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஒகத்து 07 ஆம் திகதிய 2396/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2026.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2026 பெப்ரவரி 17, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1184/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச்சோலை வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கி வந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலை மாணவர்கள் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு இறுதியாக தோற்றிய ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி பாடசாலையின் பெயர் யாதென்பதையும்;

(v) அந்தப் பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(viii) அந்தப் பாடசாலையின் பெயருக்காக அந்தப் பாடசாலையின் தாபகர் அல்லது பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக திகழ்ந்தவரின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1223/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய சக்திப் படலங்கள் மூலமாக பிறப்பிக்கப்பட்டு இலங்கையின் தேசிய மின்சக்தி கட்டமைப்பிற்கு நாளொன்றிற்கு சேர்க்கப்படுகின்ற மின் அலகுகளின் எண்ணிக்கை எத்தனை மெகாவொட் என்பதையும்;

(ii) ஒரு மெகாவொட் மின் அலகிற்காக செலுத்தப்படுகின்ற பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறித்த பணத்தொகை தற்பொழுது குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், புதிய தொகை எவ்வளவு என்பதையும்;

(v) சூரிய சக்திப் படலங்கள் மூலமாக மின் பிறப்பாக்கம் செய்யப்படுவதை ஊக்குவிப்பதற்கான எதிர்கால வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1363/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏதேனும் பாடசாலையொன்றில் எட்டு வருடத்திற்கும் அதிகமான காலம் சேவையாற்றி வருகின்ற அதிபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதிபர் ஒருவர் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக எட்டு வருடத்தை விட அதிகமான காலம் சேவையாற்றுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர் அடிப்படையில் அதிபர்களாக உள்ளீர்க்கப் பட்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளபோதும், அவர்களுடைய சேவைக்கான நிர்வாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான தடைகள் யாவையென்பதையும்;

(v) பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு, மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்கள் விண்ணப்பிப்பதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

(vi) எட்டு வருடத்திற்கும் அதிகமாக ஒரே பாடசாலையில் மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்களுக்கு, இடமாற்றம் வழங்குவதற்குள்ள இயலுமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1409/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை முதலீட்டுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முதலீட்டாளர்களை கவர்வதற்கு அரசாங்கம் வழங்குகின்ற சலுகைகள் யாவை என்பதையும்;

(iii) முதலீட்டார்களுக்கு சிரமங்களின்றி அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான ஒரு செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகின்ற வகையில் முதலீட்டுச் சபையானது மாவட்டச் செயலகங்களில் விசேட அலகுகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவை செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1452/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் —

(i) சனசமூக நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) குறைபாடுகளற்ற மற்றும் பயன்படுத்த தகுந்த நிலையில் காணப்படுகின்ற சனசமூக நிலையங்களின் எண்ணிக்கை;

(iii) கழிப்பறைகள், தண்ணீர் அல்லது மின்சார வசதிகள் இல்லாத சனசமூக நிலையங்களின் எண்ணிக்கை;

(iv) சனசமூக நிலையங்கள் இல்லாத கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி குறைபாடுகள் காரணமாக, பொது மக்களுக்கு சேவை வழங்கும்போது அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளதை அவர் அறிவாரா;

(ii) தரமான சேவையை வழங்கும் பொருட்டு மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டம் யாது;

(iii) சனசமூக நிலையங்கள் இல்லாத கிராம அலுவலர் பிரிவுகளில் புதிய சனசமூக நிலையங்களை நிர்மாணிப்பதற்கான திட்டம் உள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1475/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அல்லது இனங்காணப்பட்டுள்ள வன ஒதுக்கங்களின் அளவு மற்றும் வன ஒதுக்கங்களாக பிரகடனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வனங்களின் அளவு ஹெக்டயர்களில் எவ்வளவு;

(ii) நீண்டகாலமாக வதிவிட தேவைகளுக்காக அல்லது பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், பிற்காலத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள காணிகளின் அளவு மேற்படி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி காணிகளில் மீள விடுவிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iv) திருகோணமலை மாவட்டத்தில் யானை-மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்காகத் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1559/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு உகந்ததொரு விளையாட்டு மைதானம் இல்லை என்பதையும்;

(ii) 'மெக்கெய்சர் (Mc Heyzer Stadium) விளையாட்டு மைதானத்தை' அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அப்பணிகள் கைவிடப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதிக கடினப்பந்து கிரிக்கெட் வீரர்கள் இருந்தபோதிலும், அதற்கு உகந்த ஆடுகளங்களுடன் கூடிய மைதானமொன்று இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா;

(ஆ) (i) 'மெக்கெய்சர் மைதானத்தின்' அபிவிருத்திப் பணிகள் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதில் சட்டரீதியான அல்லது ஏனைய பிரச்சினைகள் எழும் பட்சத்தில், சகல வசதிகளுடனும் கூடியதொரு விளையாட்டு மைதானத்தை பிறிதொரு இடத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) கந்தளாய், திருகோணமலை, கிண்ணியா மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களிலும் கடினப் பந்து கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில் சர்வதேச மட்டத்திலான கிரிக்கெட் மைதானமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது நிர்மாணிக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1697/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதாரத் துறையில் மாற்றுத்திறனாளிகளின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களுக்கான மருத்துவ மற்றும் ஏனைய சேவைகளைப் பெறுவதற்கான வசதிகளை வழங்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மருத்துவ நிறுவனங்களை அணுகும்போது மாற்றுத்திறனாளிகளை அடையாளம் கண்டு முன்னுரிமை அளிப்பதற்காக தற்போது காணப்படுகின்ற வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மாற்றுத்திறனாளிகளுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மை மற்றும் மனப்பாங்குத் திறன்களை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மாற்றுத்திறனாளிகளின் —

(i) சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் தொழில்நுட்ப மூலோபாயங்கள் யாவையென்பதையும்;

(ii) சுகாதார ஒத்துழைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மருந்துகள் மற்றும் பரிசோதனைகளுக்கான நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) சுகாதாரச் சேவைகளை சமமாக அணுகும் வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1702/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசுக்குச் சொந்தமான வெகுசன ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் தற்போது பதிவு செய்துகொண்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(v) அவை செலுத்தப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(vi) இந்த நடைமுறையின் கீழ் கொடுப்பனவுகளை செலுத்தும்போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி முறைகேடுகள் தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1785/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டுக் கடற்சார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) அதற்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்த நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாதுகாப்பு வழங்கும் பொறுப்புகள் மாற்றமடைந்திருப்பின் —

(i) மாற்றத்திற்குட்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) புதிய நிறுவனத்தின் பெயர் மற்றும் அதன் தன்மை எவ்வகையானது என்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டு வரையில் மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்ட வருமானம் ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனமானது ஒரு கூட்டு நிறுவனம் எனில், ஒவ்வொரு தரப்பினருக்கும் உரித்தான இலாப வீதம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனம் —

(i) ஆரம்பத்திலிருந்து இதுவரையில் இலங்கைக் கடற்படைக்கு செலுத்தியுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) வழங்கிய சேவைகளுக்காக கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iii) சார்பாக, முப்படையினரால் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கி வகைகளின் எண்ணிக்கை, அவற்றின் வகை அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) துப்பாக்கிகளுக்கு செலுத்தியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2026 பெப்ரவரி 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1466/2025

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் காட்டு விலங்குகளின் தாக்குதல்கள், பாம்புக் கடி, குளவிக் கொட்டு மற்றும் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கும் உள்ளாவதை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், கடந்த ஐந்து வருட காலப்பகுதியினுள் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி ஆபத்துகளில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழிலிடங்களில் தொழில் வழங்குநர்களின் வாய்மூல, உடல் ரீதியான அல்லது வேறு வகையிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி துன்புறுத்தல்களை தடுப்பதற்காக ஏதேனும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1500/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டப்புற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மேற்படி தோட்டப்புற வீடுகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கப்பட்ட நிதி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தோட்டப்புற வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1542/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை, நாகஸ்தென்ன தோட்டம் இன்றளவில் யாருக்குச் சொந்தமானது என்பதையும்;

(ii) அந்தத் தோட்டத்தின் முகாமைத்துவம் சிறந்த மட்டத்தில் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) அந்தத் தோட்டத்திற்குரிய காணிகள் தனியாரினால் கைப்பற்றப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி தோட்டத்திலுள்ள பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமுதாய ரீதியில் பெறுமதிமிக்க காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1576/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் மலையக மக்களுக்காக 'சிட்டி ரைடர்' பேருந்துகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகள் வழங்கப்பட்டதன் குறிக்கோள் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துகளை வழங்கிய அமைப்புகள் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொண்ட அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அப்பேருந்துகளில் பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) மேற்படி பேருந்துகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) மேற்படி பேருந்துகளை தற்பொழுது பயன்படுத்தும் தரப்பினர் மற்றும் எவ்வகையான பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1637/2025

கௌரவ ருவன் விஜேவீர,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'செமட செவன' கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த கருத்திட்டத்திற்கான நிதி மூலம் யாதென்பதையும்;

(iii) இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக பயனாளிகளைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை மற்றும் உண்மையில் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1664/2025

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் களுத்துறை மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, இறையிலி உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் காணி அனுமதிப்பத்திரங்கள் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அனுமதிப்பத்திர காணிகளுக்காக இறையிலி உறுதிகளை வழங்க முடியுமா என்பதையும்;

(iv) பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில், பயன்படுத்தாது கைவிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அவ்வாறான காணிகளை மீண்டும் கையகப்படுத்தி, காணியற்றோருக்கு வழங்க முடியுமா என்பதையும்;

(vi) தனி நபர்கள் அல்லது நிறுவனங்களால் முறைகேடாக கையகப்படுத்தியுள்ள காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதுமான காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1696/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வணிக நோக்கத்திற்காக வெடி மருந்துகளைப் பயன்படுத்துவது குறித்து தற்போது வலுவிலுள்ள சட்டங்களின் எப்பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகிறது என்பதையும்;

(ii) வெடி மருந்துகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகிக்கும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) அந்தத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலர்களின் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அப்பணிக்காக மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பின், அவர்களின் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

(v) இன்றளவில் வெடி மருந்துக் கட்டுப்பாட்டாளர் பதவி வெற்றிடமாக உள்ளதா என்பதையும்;

(vi) அந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) மேற்படி பதவிக்கு இரண்டாந்தர அலுவலர்கள் பயிற்றப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வணிக அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள வெடி மருந்து உரிமங்கள் மற்றும் தற்போதைய செயற்பாட்டு உரிமம் பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இத்தகைய உரிமங்களை விநியோகிப்பதற்காக பின்பற்றப்படுகின்ற வழிமுறை யாதென்பதையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒழுங்குறுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iv) வெடி மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தனியார் நிலையங்கள் யாவை என்பதையும்;

(v) அவற்றின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) உரிமம்பெறுநர் ஒருவருக்கு தடவை ஒன்றில் விநியோகிக்கப்படுகின்ற வெடி மருந்துகளின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1720/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் திணைக்களத்தின் முறைப்பாட்டு பிரிவில் முறைப்பாடொன்றைத் தீர்க்க எடுக்கும் சாதாரண காலம் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில், அந்தப் பிரிவில் இருக்கும் தீர்க்கப்படாத முறைபாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த முறைபாடுகளைத் துரிதமாகவும் பயனுடையதாகவும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1739/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் சுனாமியின் பின்னர் மீளமைக்கப்பட்ட மீனவக் கட்டடங்கள் உள்ளன என்பதையும்;

(ii) அவற்றுள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்ட அல்லது விற்பனைச் செய்யப்பட்ட மீனவக் கட்டடங்கள் உள்ளன என்பதையும்;

(iii) அவ்வாறான கட்டடங்களில் தற்போது வரை பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டங்களும் உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ)(iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள மீனவக் கட்டடங்களை அரச மற்றும் பொதுத் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) சுனாமியின் பின்னர், சிறு மீனவ சம்மேளனத்தால் ஜலால்டீன் சதுக்கத்திலும் கனகர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்ட மீனவர் பல்தேவைக் கட்டடங்களுக்கு பொறுப்பாக பணியாற்றுகின்ற, வருமானத்தை அறிவிடுகின்ற மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கின்ற தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி கட்டட வளவுகளின் உரிமையாளர்கள் அடையாளங் காணப்பட்டால், பொத்துவில் பிரதேச செயலகம் மூலம் அவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி, மேற்படி மீனவ பல்தேவைக் கட்டடங்களை பொத்துவில் பிரதேச சபைக்கு அல்லது பொது மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1809/2026

கௌரவ லசித் பாஷன கமகே,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநீதிக்கு உள்ளான வைப்பாளர்களினால் கம்பஹா சனச வங்கி தொடர்பில் பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த முறைப்பாடுகள் பொலிசாருக்குக் கிடைத்த திகதி ஒவ்வொரு முறைப்பாட்டிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அந்த முறைப்பாடுகள் தொடர்பாக பொலிசார் இதுவரை மேற்கொண்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) சனச வங்கியின் மூலம் கடன் பெற்றுள்ள Gampaha Development Company (PVT) Ltd, (GDC) நிறுவனம் தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அந்த முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 பெப்ரவரி 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில நுகர்வுப் பொருட்களுக்கு அரசாங்கம் அடிக்கடி அதிகபட்ச விற்பனை விலையை நிர்ணயிக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி பொருட்களை குறிப்பிட்ட சில வர்த்தகர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்களென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) மேற்படி பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் மாதாந்தம் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் ஆட்களுக்கு வழங்கக்கூடிய தண்டனைகள் யாவை என்பதையும்;

(iv) தொடர்ச்சியாக அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

117/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இன்றளவில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iii) ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

353/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காக்காச்சிவட்டை, விளாந்தோட்டம், திக்கோடை – தும்பாளை மற்றும் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் – தர்மபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

564/2025

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மருந்து வகைகளின் எண்ணிக்கையும் குறித்த மருந்துகளின் பெயர்களும் ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்து வகைகளில் உற்பத்திச் செலவை விடவும் குறைந்த விலையில் தனியார் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மருந்து வகைகள் மற்றும் அவற்றின் அளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதன் காரணமாக மேற்குறிப்பிட்ட கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவென்பதையும்;

(iv) அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

628/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதுருவெல நகரில் கைவிடப்பட்ட வர்த்தக கட்டிடத் தொகுதியொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இந்த வர்த்தக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத் தொகுதியை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1264/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க — வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பொருளாதார மத்திய நிலையம் வாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக கூட்டிணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தப் பொருளாதார மத்திய நிலையங்களில் தற்போது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எவ்வித இடையூறுகளுமின்றி தமது வியாபாரங்களை கொண்டு நடாத்துவதற்கும், எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்பதற்கும் உத்தரவாதமளிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1717/2025

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய பொருளாதாரத் தரவுகளைத் திரிபுபடுத்தி (Data Massage) பொருளாதார வளர்ச்சி வேகம் மற்றும் பணவீக்க வீதப் பெறுமானங்கள் மாற்றப்பட்டுள்ளமையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைத் தரவுகளை மாற்றியமைத்து தேசிய வருமானத்தின் வருடாந்த வளர்ச்சி வேகம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் செயற்கையான முறையில் குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரமெனக் காண்பித்து, உயர் வட்டி வீதத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக தந்திரமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iv) 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட பொருளாதாரக் கொலையாளிகளுக்கும், 2022ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1719/2025

கௌரவ தனுர திசாநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒரு பொதுமகனுக்கு அனுமதிப்பத்திரத்தின் கீழ் துப்பாக்கியொன்றை வழங்குகையில் பின்பற்றப்படும் நடைமுறை யாது;

(ii) அவ்வாறு அனுமதிப்பத்திரத்தின் கீழ் துப்பாக்கிகளை வழங்குவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் திகதி, நடைமுறை மற்றும் அளவுகோல்கள் யாவை;

(v) அனுமதிப்பத்திரத்தின் கீழ் துப்பாக்கிகளை வழங்குகையில் பாதுகாப்பு தடை நீக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் முறையியல் யாது;

(vi) இதன்போது ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுடுகலன் கட்டளைச் சட்டத்தை காலத்திற்கேற்ற வகையில் திருத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) இறுதியாக துப்பாக்கி அனுமதிப்பத்திரம் மீதான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ள திகதி யாது;

(iii) அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், குறித்த திகதி யாது;

(iv) அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்த வேண்டிய தண்டப் பணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(v) அனுமதிப்பத்திரங்கள் சேதமடைதல், உரிமை மாற்றம் செய்யப்படுதல் அல்லது துப்பாக்கிகளை பழுது பார்த்தல் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1808/2026

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில், தொல்பொருள் முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள் அமைந்துள்ளனவென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பத்தேகம, நாகொட, வெலிவிட்டிய திவிதுர, நியாகம, தவலம மற்றும் நெலுவ ஆகிய பிரதேச செயலகங்களின் ஆளுகைகளில் அமைந்துள்ள தொல்பொருள் இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வளவுகளுள் தொல்பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்ற இடங்கள் யாவை என்பதையும்;

(iv) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட பிரதேசங்கங்களுள் முற்காலத்தில் கண்டி இராசதானிக்கு உரித்தாய் இருந்த பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி இடங்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி தொல்பொருள் இடங்கள் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1834/2026

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் கவனிப்பாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சேவைத் தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி வைத்தியசாலைகளில் கவனிப்பாளர்களின் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) சிறந்த நோயாளர் பராமரிப்புச் சேவையை வழங்கும் பொருட்டு கவனிப்பாளரொருவருக்கு பொறுப்பளிக்கக்கூடிய நோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் போதியளவு கவனிப்பாளர்கள் இன்மையால், நோயாளர்களின் பொறுப்பாளர்கள் கட்டணம் செலுத்தி வெளி கவனிப்பாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) சில நாட்களுக்கு கவனிப்பாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளர்களுக்கு சேவையாற்றுவதற்குத் தேவையான கவனிப்பாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2026 பெப்ரவரி 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

206/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் கமத்தொழில் துறையின் தொழில்நிலை வீதம், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் கமத்தொழில் துறையின் தொழில்நிலை வீழ்ச்சியடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இளைய சமூகத்தினரை கமத்தொழில் துறையின்பால் ஈர்க்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

228/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊழல் ஒழிப்பு தொடர்பாக கொழும்பில் இயங்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் தாபிக்கப்பட்ட சட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நீதிமன்றத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நீதிமன்றத்தில் தற்போது விசாரணை செய்யும் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி நீதிமன்றத்தில் விசாரணைசெய்து நிறைவு செய்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இதுவரையில் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஊழல் ஒழிப்பு மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச்செல்லுதல் செயலிழந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலஞ்சம், நிதிக் குற்றங்கள் மற்றும் நிதி மோசடி வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

472/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர் களின் பெயர்களையும்;

(ii) அப் பணிப்பாளர்கள் சபையினை நியமிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறாக, நிதிகளின் மொத்தப் பெறுமதியினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அந்நிதியம் தொடங்கப்பட்டது முதல் இற்றைவரை —

(i) வருடாந்தம் அந்நிதியத்திற்குக் கிடைத்த நிதியினையும் அதன் நிதியிடல் மூலங்களையும்;

(ii) அந்நிதியத்தின் வருடாந்த மீண்டெழும் செலவினையும்;

(iii) புலமைப்பரிசில்களுக்காகவும், மீண்டெழாத செலவுக்காகவும், மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்காகவும் நிதியத்தினால் வருடாந்தம் செய்யப்பட்ட கொடுப்பனவுகளையும்;

(iv) பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வருடாந்தம் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையினையும்;

(v) புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

வெவ்வேறாக அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

826/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் அடைந்துள்ள முழுமையான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதில் தொழிற்பாட்டு நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தால் விமானங்களுக்காகச் செலுத்தப்படும் வருடாந்தக் குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படிக் கடன் தவணையில் உள்ள மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

883/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்பு உறுதி (Deeds of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permits) வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்பு உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1124/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட 'கொழும்பு டொக்யார்ட் பிஎல்சி' நிறுவனத்தின் (Colombo Dockyard PLC) முழு உரித்தும் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்;

(ii) அந்த நிறுவனத்தில் வேறு பங்குதாரர்கள் இருப்பின், அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அரசாங்கத்திற்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் இடையிலான பங்குகளின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) ஏனைய பங்குதாரர்கள் வசமுள்ள சொத்துக்களின் பெறுமதி டொலர்களில் யாதென்பதையும்;

(v) தற்போதைய பங்குதாரர்களுக்கு பங்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ள ஆண்டுகள் யாவையென்பதையும்;

(vi) அவர்களுக்கு பங்குகளை விற்பனை செய்கையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், விலைமனுக்களை சமர்ப்பித்துள்ள ஒவ்வொரு பங்குதாரரினதும் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பித்துள்ள விலைமனுத் தொகை ஆகியன வெவ்றோக யாவையென்பதையும்;

(viii) மேற்படி ஒவ்வொரு பங்குதாரரும் கொள்வனவு செய்துள்ள பங்குகளுக்கு ஏற்ப முதலீடு செய்துள்ள தொகை வெவ்றோக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1244/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற வனசீவராசிகள் வலயங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வனசீவராசிகள் வலயத்துக்குரிய காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் வனசீவராசிகளுக்காக காணப்படுகின்ற குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், வனசீவராசிகள் வலய வாரியாக அவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(v) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் இன்றளவில் புனரமைக்கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்பட்டுள்ள குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விஞ்ஞானபூர்வமாக இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவை என்பதையும்;

(iv) இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் இதுவரை வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1649/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப் பொருட்களின் அளவு மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த காலப்பகுதியில் போதைப்பொருட்கள் மற்றும் ஒருங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களால் ஈட்டப்பட்டு, செயலிழக்கச் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஆதனங்களின் அளவு மற்றும் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி சொத்துக்கள் மற்றும் ஆதனங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1653/2025

கௌரவ அஜித் கிஹான்,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலா ஈர்ப்பு நாட்டின் சில பிரதேசங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) சுற்றுலாத் தொழிற்துறை சார்ந்து அதிக வாய்ப்புடைய புத்தளம் மாவட்டத்தை சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்கு தற்போது வரை வேலைத் திட்டமொன்று இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) புத்தளம் மாவட்டத்தில் சுற்றுலாத் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக இனங்காணப்பட்டுள்ள சுற்றுலாத் தளங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1710/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 நவம்பர் மாதத்தின் பின்னர் இதுவரை கிடைத்துள்ள முதலீடுகள், அத்தகைய முதலீடுகளின் அளவு மற்றும் வழங்கியுள்ள நாடுகள் வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி நாடுகளிலிருந்து முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை அமெரிக்க டொலர்களில் எவ்வளவு;

(iii) மேற்படி முதலீடுகளுள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை;

(iv) இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்கள், அவ்வாறு ஆரம்பிக்கப் படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 107/2026

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா,— தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையின் தேர்தல் முறைமையினை மறுசீரமைப்பதற்குக் கடந்த பல வருடங்களாக எண்ணற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினாலும்;

தேர்தல் முறைமைகள் மறுசீரமைப்பு தொடர்பாக ஆராய்வதற்காக பல சந்தர்ப்பங்களில் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களினால் பல இடைக்கால அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினாலும்; அத்துடன்

இக்குழுக்களின் விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினாலும்;

பின்வரும் விடயங்களும் உள்ளடங்களாக, தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

(அ) தேர்தல்கள் தொடர்பான சட்டங்கள், மிகக் குறிப்பாக, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம், உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் மற்றும் அச்சட்டங்களுக்கு பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் அச்சட்டங்களின் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய விசேட ஏற்பாடுகள் சட்டங்களை மீளாய்வு செய்தல்;

(ஆ) இச்சட்டங்களை மீள்திருத்தம் செய்தல், திருத்தம் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல் போன்ற தேவைகளை மதிப்பீடு செய்தல்;

(இ) தேர்தல்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களுக்கு அவசியமான மறுசீரமைப்பு மற்றும் திருத்தங்களைச் செய்வதற்குப் பரிந்துரை செய்தல்

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ தடைபெறாது கூடுவதற்கும்,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

---